# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**இடைநிலை மனு எண். 11/2017-ன்**

**நிறைவேற்று மனு எண். 26/2012-ன்**

**அசல் வழக்கு எண். 217/2008**

பெயர்: **சின்னராஜு** நாள்: 06.03.2026

எ.மா.சா.2 – மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

எ.மா.சா.2 – சின்னராஜு - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி நேரம் 12.20</u>

11.03.2008 ஆண்டிலிருந்து தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் உள்ளதாக கூறியிருக்கிறேன் என்ற நிலையில் அதனை நிரூபிக்க இந்நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால் வழக்கு சொத்து பட்டாவானது அருள்முருகன் பெயரில் உள்ளது என்றால், சரிதான். அருள்முருகன் பெயரில் பட்டா கொடுத்தது தவறு என்று மேல்முறையீடு செய்தேனா என்றால், நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நான் மேல்முறையீடு செய்யவில்லை. வழக்கு சொத்தில் நான் எப்பொழுதும் சுவாதீனத்தில் இல்லை என்றும், கிரையம் பெற்ற பின் மணிவாசமும், அதன் பின்னிட்டு பச்சமுத்துவும் அதற்கு பின்னிட்டு அருள்முருகன் தற்போது சுவாதீனத்தில் இருந்து வருவதன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. இந்நீதிமன்றத்தில் இடைநிலை மனு எண். 27/2015 தாக்கல் செய்தும் அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த மனுவில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. இடைநிலை மனு எண். 11/2017 என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றால், தடையுத்தரவு கோரி தாக்கல் செய்துள்ளார்கள். அதனால் நான் இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். இடைநிலை மனு எண். 27/2015 (Or.22 R97-ல்) தாக்கல் செய்ததன் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரியல்ல. இடைநிலை மனு எண். 11/2017-ல் கோரிய பரிகாரம் வேறு மற்றும் இடைநிலை மனு எண். 27/2015-ல் கோரிய பரிகாரம் வேறு என்றால், சரியல்ல. பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு கிரையம் செய்த பின்னிட்டு மோசடியாக நாங்களும் பாலசுப்ரமணியனும் வஞ்சக கூட்டு சேர்ந்து கொண்டு கிரைய

ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. பாலசுப்ரமணியம் தான் எங்களை மோசடியாக ஏமாற்றி மணிவாசகத்திற்கு கிரையம் செய்துள்ளார். பாலசுப்ரமணியம் மணிவாசகத்திற்கு கிரையம் செய்த பின்னிட்டு வழக்கு சொத்திற்கு அவர் உரிமை இல்லாத போது நாங்கள் தயார் செய்த கிரைய ஒப்பந்த படி வழக்கு தாக்கல் செய்த அ.வ.எண். 217/2008 வழக்கில் நேரில் ஆஜராகி மேற்படி வழக்கை மோசடியாக ஒப்புக் கொண்டுள்ளார் என்றால், சரியல்ல. கிரைய செய்து கொடுத்து கொள்ளாமல் மீதி கிரையத்தொகையை பெற்றுக் கொள்வதற்கு ஆட்சேபனை செய்யமாட்டார்கள் என்றால், சரிதான். எங்களுக்கு கிரையம் செய்து கொடுத்து பின்னிட்டு மீதி கிரையத் தொகையை நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை என்றால், நீதிமன்றத்தில் தொகையை வைப்பீடு செய்ததால் நாங்கள் ஆட்சேபனை செய்யவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளில் நாங்களும் பாலசுப்ரமணியனும் மோசடியாக கையாண்டுள்ளோம் என்றால், சரியல்ல. பாலசுப்ரமணியம், மணிவாசகம், பச்சமுத்து மற்றும் அருள்முருகன் சட்டத்திற்கு புறம்பாக கிரையத்தை ஏற்படுத்திக் கொண்டு பட்டாவை அவர்கள் பெயரில் மாற்றிக் கொண்டு எங்களை ஏமாற்றும் நோக்கத்தோடு மோசடி செய்துள்ளனர். மேற்கூறியவாறு பாலசுப்ரமணியம், மணிவாசகம், பச்சமுத்து மற்றும் அருள்முருகன் ஆகியோர்கள் தயார் செய்த ஆவணங்கள் எங்களை கட்டுப்படுத்தாது என்றும், செல்லாது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால், வழக்கு நிலுவையில் உள்ளதால் நான்விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை. பாலசுப்ரமணியம், மணிவாசகம், பச்சமுத்து மற்றும் அருள்முருகன் அவர்கள் பெயரிலுள்ள பட்டா செல்லும் என்றால், சரியல்ல. இந்த மனு மனுதாரார் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று கேட்கிறேன் என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம்.12:45</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.03.06 13:02:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.